[2021 ஆகஸ்ட் 19

(ஆ) எழும்பூர் தொகுதி, கே.பி. பூங்கா, குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் தரமில்லாமல் கட்டப்பட்டமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன், என்ன? (குறுக்கீடு) உட்காருங்கள். எழும்பூர் தொகுதி, கே.பி. பூங்கா பகுதியிலுள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் தரமற்ற முறையில் கட்டப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இ. பரந்தாமன், திரு. கு. செல்வபெருந்தகை ஆகியோர் விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானமாக அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை, சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன் அவர்கள். (குறுக்கீடு) வாய்ப்பு ஒருவருக்குத்தான்.*

திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இந்த எளியோனுடைய குரல் ஒலிப்பதற்குக் காரண, காரியமாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) நான் கொடுத்துள்ள அறிவிப்பு குறித்து அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன். கன்னிப் பேச்சு பேசி தொடங்க வேண்டுமென்றுதான் நான் நினைத்தேன். ஆனால், அதற்கு முன்பாகவே, இந்த அவையின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் பேசுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கன்னிப் பேச்சு என்ற சொல்லை மாற்றி அறிமுகம் என்ற சொல்லைப் பயன்படுத்தலாமா என்று நேற்றையதினம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். முடிந்தால் அந்தச் சொல்லையே பயன்படுத்திக்கொள்ளுங்கள்.*

திரு. இ. பரந்தாமன்: *அவை அவ்வாறு முடிவெடுத்தால் அதற்குக் கட்டுப்படுகிறேன். இந்த நேரத்தில் எனக்கு ஒரு பொன்மொழி நினைவிற்கு வருகிறது. 'மக்களிடம் செல்லுங்கள், மக்களிடம் பழகுங்கள், மக்களிடமிருந்து கற்று வாருங்கள்' என்று பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிடுவார்கள். அதன் அடிப்படையில், நான் சார்ந்திருக்கக்கூடிய*

2021 ஆகஸ்ட் 19] [திரு. இ. பரந்தாமன்]

எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில், மக்களின் பிரச்சினையாக விளங்கிக்கொண்டிருக்கின்ற, கே.பி. பூங்கா பகுதியில் கடந்த ஆட்சியில் கட்டப்பட்ட குடிசை மாற்று வாரியக் கட்டடம் தரமற்ற முறையில் இருக்கிறது என்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியிலும் ஏற்பட்டிருக்கிறது. இது ஊடகங்களிலும் செய்திகளாக வந்திருக்கின்றன என்பதை உணர்ந்து, நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

முற்பகல் 10–15

திரு. இ. பரந்தாமன்: கடந்த ஆட்சியில் phase–I–ல் 864 குடியிருப்புகள் ரூ.112.26 கோடி மதிப்பீட்டில் stilt plus 9 floors என 4 blocks ஆக கட்டப்பட்டன. இந்தக் கட்டடம் 19–1–2018 அன்று கட்டத் தொடங்கப்பட்டு 18–5–2019 அன்று முடிக்கப்பட்டுவிட்டது. கட்டடத்தினுடைய கட்டுமானத்தினுடைய காலத்தை இந்த அவை தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்த தேதிகளை குறிப்பிடுகிறேன். 9 மாடி கட்டடம் கட்டுவதற்கு தொடங்கப்பட்ட தேதி 19–1–2018, ஆனால் கட்டி முடிக்கப்பட்ட தேதி 18–5–2019.

அடுத்து, phase–II–ல் 1,056 குடியிருப்புகள்; stilt + 11 Floors என நான்கு Blocks ஆக கடந்த ஆட்சியில் கட்டியிருக்கிறார்கள். அதனுடைய மதிப்பீடு 139.13 கோடி ரூபாய். நான்கு Blocks–ல் இரண்டு Blocks–ஐ முதலில் கட்டத் தொடங்கப்பட்ட தேதி 10–8–2018. பிறகு மீதமுள்ள இரண்டு Blocks கட்டத் தொடங்கப்பட்ட தேதி 11–2–2019. நான்கு Blocks–ம் கட்டி முடிக்கப்பட்ட தேதி 5–8–2020; எவ்வளவு வேகமாக கட்டப்பட்டிருக்கிறது, curing–க்கான தேவைகள் எல்லாம் கொடுக்கப்படவில்லை என்பதையெல்லாம் கட்டுமானப் பொறியாளர்கள் நன்கு உணர்ந்திருக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் விஷயத்திற்கு வாருங்கள்.

திரு. இ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஷயத்திற்கு வருகிறேன். தொட்டால் சிணுங்கி என்ற தாவரத்தைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்; பார்த்திருக்கிறோம். ஆனால் தொட்டாலே உதிரும் சிமென்டை கண்டுபிடித்த நவீன

விஞ்ஞானிகள் உள்ள ஆட்சி கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். கடந்த 10 ஆண்டுகளில் கடந்த ஆட்சி கட்டிய அரசு மற்றும் பொது கட்டடங்கள் எல்லாம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கட்டுமானத்தைக் கட்டிய கட்டுமான நிறுவனம் யார் என்பதைக் கண்டுபிடித்து, அவர்கள் கடந்த 10 ஆண்டுகளில் எங்கெங்கெல்லாம் கட்டடங்கள் கட்டி முடித்திருக்கிறார்களோ அந்தக் கட்டடங்களையெல்லாம் ஆய்வுக்குக் கொண்டுவர வேண்டும்.

"உள்ளங்கை நெல்லிக்கனிபோல்" நாமக்கல்லில் ஒரு மருத்துவமனை கட்டப்பட்டது. அந்த மருத்துவமனை கட்டிக்கொண்டிருக்கும்போதே சரிந்து விழுந்ததை நாடு அறிந்தது. இதேபோன்று விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு தடுப்பணை கட்டப்பட்டது; அந்த அணை பெய்த மழையிலேயே அடித்துச் செல்லப்பட்டது. அதுபோன்று மதுரை மாவட்டத்தில் ஒரு பாலம் கட்டப்பட்டது. அந்தப் பாலமும் கட்டி முடிக்கப்பட்டு திறப்புவிழாவின்போதே சரிந்து விழுந்தது. காஞ்சிபுரம் மாவட்டம், ஒரத்தூரில் check dam *கட்டிக்கொண்டிருக்கும்போதே பெய்த மழையில் சரிந்து விழுந்தது. இவையெல்லாம் கடந்த கால ஆட்சியில் தரமற்ற முறையில் கட்டப்பட்டன என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இந்தக் கட்டடத்தைக் கட்டி முடித்த பிறகு, தரமானது என்று சான்றளித்த அதிகாரிகள். இந்தக் கட்டடம் கட்டி முடித்தபிறகு இதற்குப் பணம் செலுத்தலாம் என்று முடிவெடுத்த அதிகாரிகள்; இந்தக் கட்டடத்தை கட்டிய ஒப்பந்ததாரர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மேல் கிரிமினல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். பத்து ஆண்டுகள் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்ட கட்டடங்கள் எல்லாம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று மிகப் பணிவோடு இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

இறுதியாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றைச் சொல்லி முடிக்கிறேன். கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில், முரசொலி மாறன் பாலம் பெரம்பூரில் கட்டப்பட்டது; தரமான பாலம். அந்த பாலம் தரமற்ற முறையில் கட்டப்பட்டது என்று அறிவித்து, மறைந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள், முத்தமிழ்

2021 ஆகஸ்ட் 19] [திரு. இ. பரந்தாமன்]

அறிஞர் கலைஞர் அவர்களையும், இந்த அவையில் வீற்றிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நள்ளிரவில் கைது செய்தார்கள். தரமற்ற முறையில் கட்டப்பட்டது என்று * உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டைச் சொல்லி வழக்குப் பதிந்த அந்த அரசின்மீது, இன்றைக்கு தரமற்ற முறையில் கட்டப்பட்ட இந்தக் கட்டடத்திற்கு அந்தத் துறையின் அமைச்சராக இருந்த மாண்புமிகு பன்னீர்செல்வம் அவர்கள் பொறுப்பேற்று, அவரை கிரிமினல் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடைசியாகச் சொன்னதற்கு Charge-sheet போடவில்லை. அதற்கு evidence இல்லையென்று சொல்லி முடித்துவிட்டார்கள். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. இ. பரந்தாமன் அவர்கள், கே.பி. பார்க் ஒன்றாவது திட்டப் பகுதியில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மிகவும் மோசமான நிலையில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்டிருக்கின்றன என்றும், அதற்கு நீங்கள் ஆய்வு செய்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதைப்போல், கடந்த ஆட்சியில் தமிழகத்தில் கட்டப்பட்டிருக்கின்ற ஒட்டுமொத்தக் கட்டடங்களையும் ஆய்வு செய்து அவற்றின் தரத்தை உறுதி செய்திட வேண்டுமென்ற கருத்துகளை அரசின் கவனத்திற்கு கொண்டுவந்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புளியந்தோப்பு, கேசவபிள்ளை திட்டப் பகுதியில் 1977–1978 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட குடிசை மாற்று வாரிய 864 குடியிருப்புகள் சிதலமடைந்த நிலையில் இருந்ததால் அந்தக் குடியிருப்புகளை இடித்துவிட்டு மறு கட்டுமானம் செய்ய 2016 ஆம் ஆண்டு அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் ஒப்புதல் பெறப்பட்டு அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் கே.பி. பூங்கா பகுதி–1–ல் தாங்கும் தளம் மற்றும் ஒன்பது அடுக்குமாடி கொண்ட வகைப்பாட்டில் ரூ.112.60 கோடி

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

செலவில் 864 குடியிருப்புகள் கட்டுவதற்கு ஜனவரி 2018 ஆம் ஆண்டு கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, 2019 ஆம் ஆண்டு மே மாதம் கட்டி முடிக்கப்பட்டது.

முற்பகல் 10–20

சென்னை மாநகராட்சியின் வேண்டுகோளின்படி, இக்குடியிருப்புகள் 2020 ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை கொரோனா சிகிச்சை மையமாக பயன்பாட்டில் இருந்து வந்தது. இந்த நிலையில், அங்கு குடியிருந்த மக்கள், “வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட பின்னரும் எங்களுக்கு வீடுகள் வழங்கப்படவில்லை” என்று செய்தித் தாளில் அளித்த பேட்டியை அறிந்து, நானும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்களும், அந்த தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. இ. பரந்தாமன் அவர்களும், அன்றைக்கே நேரில் சென்று ஆய்வு செய்தோம். அடையாளம் தெரியாத சில நபர்களால் அங்கிருந்த குடிநீர்க் குழாய் இணைப்புகள், கழிவு நீர்க் குழாய்கள், மின்தூக்கிகள் ஆகியவை சேதப்படுத்தப்பட்டதை அறிந்து, அவற்றையெல்லாம் உடனே சரி செய்ய வேண்டும் என்று அதிகாரிகளிடத்தில் கட்டளையிட்டிருந்தோம். அதை உடனடியாக சரி செய்து, ஆடி மாதம் முடிந்ததற்குப் பிறகு, அந்தக் குடியிருப்புகளை பயனாளிகளுக்கு வழங்கிட வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது.

இதற்கிடையே பழுது நீக்கம் செய்யும் பணிகள் நிறைவடைவதற்கு முன்பாகவே, கடந்த மாதம் மழை பெய்த காரணத்தால், கே.பி. பூங்கா அருகில் தற்காலிகக் குடியிருப்பில் இருந்தவர்களெல்லாம் அந்தக் குடியிருப்புகளுக்குச் சென்று குடியிருந்து வருகிறார்கள். அந்தக் குடியிருப்புகளுக்கு பயனாளிகள், பயனாளியின் பங்களிப்புத் தொகையாக ஒவ்வொரு குடியிருப்புக்கும் ரூ. 1½ இலட்சம் பணம் கட்ட வேண்டும். வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிற ஏழை மக்களெல்லாம் அந்தப் பணத்தைக்கூட உடனடியாக அரசுக்கு கட்ட முடியாது என்ற நிலையிலே, வங்கியின் மூலமாக நாங்கள் கடன் பெற்றுத் தருகிறோம், அதற்குரிய சிறிய தொகையை மாதாமாதம் நீங்கள் கட்டினால் போதும் என்று அவர்களுக்கு அறிவுரை கூறப்பட்டது. அதற்கும் நடவடிக்கை எடுக்க அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2021 ஆகஸ்ட் 19] [திரு. தா.மோ. அன்பரசன்]

இதற்கிடையில் தரம் மற்றும் உறுதித்தன்மை குறித்து ஊடகங்களில் வெளியான செய்தியின் உண்மைத் தன்மையை தெரிந்துகொள்ள நானும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், துறையினுடைய செயலாளர், குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் ஆகியோருடன் நேற்று மாலை நேரடியாகச் சென்று ஆய்வு மேற்கொண்டோம். தரம் மற்றும் உறுதித் தன்மை குறித்து ஆய்வு மேற்கொண்டு, அறிக்கை அளிக்க இந்திய தொழில்நுட்பக் கழகத்திற்கு ஏற்கெனவே கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆய்வு செய்து தரும் அறிக்கையில் கட்டுமானப் பணிகளில் தவறு உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டால், அந்தக் குடியிருப்பைக் கட்டிய ஒப்பந்ததாரர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள்மீது இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை உறுதியோடு நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டம், ஏழைகளுக்காக உருவாக்கப்பட்ட திட்டம். நாமெல்லாம் இதயமாக இன்றைக்கும் போற்றிக் கொண்டிருக்கும் நம்முடைய ஒப்பற்ற தலைவராக இருந்த அண்ணன் கலைஞர் அவர்கள் 1970 ஆம் ஆண்டு குடிசைகளே இல்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டுமென்று, முதன்முதலாக இந்தியாவிலேயே குடிசை மாற்று வாரியத்தைக் கொண்டு வந்து ஆயிரக்கணக்கான குடிசைகளை அகற்றி, அடுக்குமாடி வீடுகளைக் கட்டித் தந்த பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு; தலைவர் கலைஞருக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு ஏழை மக்களுக்காக நடைபெறுகின்ற அரசு; ஏழைகள் வாழ்வதற்காக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டப்படுகிற வீடுகள் தரமுள்ளதாக இருக்கும். அதில் யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாடு முழுவதும் அனைத்துப் பகுதிகளிலும் இந்தத் திட்டத்தின் மூலமாக வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்தச் செய்தி வந்ததற்கு பிறகு, இரண்டு நாட்களுக்கு முன்பாகவே, I.I.T. மூலமாக, அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலமாகத் தரக் கட்டுப்பாட்டு குழுக்களை எல்லா பகுதிகளுக்கும் அனுப்பி, அந்தக் கட்டடங்களை ஆய்வு செய்து அறிக்கை தர வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறோம். அந்தப் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

[திரு. தா.மோ. அன்பரசன்] [2021 ஆகஸ்ட் 19

ஆக, இந்த அரசு யார் தவறு செய்தாலும் வேடிக்கை பார்க்காது; தவறு செய்த அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்கும் என்ற செய்தியை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். இதுகுறித்து பத்திரிகைகளில் செய்தி வந்தவுடன் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 3 நாட்களுக்கு முன்பாகவே, எங்களை அழைத்து உடனே இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துவிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் இதில் பாரபட்சம் பார்க்கமாட்டார்கள். யார் தவறுகள் செய்தாலும், அது அரசு அதிகாரிகளாக இருந்தாலும் சரி, ஒப்பந்ததாரர்களாக இருந்தாலும் சரி, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மட்டும் சொல்லி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன் அவர்கள் பேசும்போது, ** என்ற வார்த்தையை பயன்படுத்தினார்கள். அதை 'உண்மைக்குப் புறம்பாக' என்று மாற்றிக் கொள்ளவும். நான் கூறிய ** என்ற வார்த்தையையும் நீக்க வேண்டும்.

3. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2021–2022 மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2021–2022, பொது விவாதம்–பதிலுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021–2022 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின்மீது பொது விவாதம் மற்றும் பதிலுரை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

முற்பகல் 10–25

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்திலே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக, கலந்துகொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இன்றையதினம் மக்களுக்காகப் பணியாற்ற வேண்டிய எதிர்க்கட்சி, தங்களுடைய சொந்த நலனுக்காக சபையைப் புறக்கணித்துள்ளார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.